DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 373/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W. 5 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலுசாமி | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : குழந்தை கவுண்டர் | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.10.2025.

முதல் விசாரணை

நான் பூலாங்கிணை மேற்கு தோட்டடத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 27.06.2013 ம் தேதி யன்று விஸ்வநாதன் மற்றும் ராமநாதன் என்பவருக்குள் நடந்த தகராறு என்று கேள்விப்பட்டு வந்தேன்.போலிசார் அங்கு வந்து மேப் போட்டு வரைபடம் வரைந்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் எனது அண்ணன் செல்லமுத்து என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. சம்பவ தேதியில் காவல் அதிகாரி எந்த நேரத்தில் உங்களை அழைத்தார்கள் என்றால் இரவு 8.00 மணிக்கு. சம்பவதததை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். இரவு 8.00 மணிக்கு போலிசார் வந்து சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து வாங்கவில்லை என்றால் ஆமாம். அதிலுள்ள விவரம் தெரியாது என்றால் பல வருடம்

ஆனதால் தற்போது ஞாபகம் இல்லை. காவல் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்திர்கள் என்றால் ஆமாம். சொன்ன தேதியில்சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 373/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லமுத்து | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | குழந்தை கவுண்டர் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.10.2025.

முதல் விசாரணை

நான் பூலாங்கிணறு மேற்கு தோட்டத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்க பற்றி எதுவும் தெரியாது. கையெழுத்து எதுவும் செய்யவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. அசா.5 எனது உடன் பிறந்த தம்பி ஆவார்.

சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 27.06.2013 ம் தேதியன்று இரவு 8.00 மணியளவில் விஸ்வநாதன் மற்றும் மயில்சாமி இடையே நடந்த வாய்க்கால் தகராறு காரணமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து எங்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றும், பார்வை மசகர் தயார் செய்தார்கள் என்றும், அதற்கு ஆதரவாக நானும் அசா.5 எனது உடன் பிறந்த தம்பியும் கையாப்பம் செய்து விட்டு தற்சமயம் எதுவும் தெரியாது என்று ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

| |
|---|
| இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.<br><br>Sd/- T.Nithyakala, B.Com., B.L.,<br>நீதித்துறை நடுவர் எண்.1<br>உடுமலைப்பேட்டை. |